திரு. மு. சண்முகம் : கூட்டுறவுத் துறையில் விவசாயப் பொறியியல் சேவா சங்கங்கள் என்று ஏற்படுத்தப்பட்டிருப்பதன் நோக்கம் என்ன ? அவை செயல்பட அரசாங்கத்திலிருந்து எடுத்துக்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்த என்ஜினியரிங் கூட்டுறவுகள் இப்படிப்பட்ட கருவிகளைச் செய்து விவசாயிகளுக்கு வினியோகிக்க வேண்டும் என்பது இந்தக் கூட்டுறவின் நோக்கங்களில் ஒன்றாகும். அவைகள் இன்னும் இந்தப் பணியை ஏற்றுக்கொள்ளவில்லை. தேவையான இடங்களில் ஏற்றுக் கொள்வார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த 32 கூட்டுறவுச் சங்கங்களில் எவ்வளவு லாபத்தில் ஓடுகின்றன ? எவ்வளவு எண்ணம் நஷ்டத்தில் ஓடுகின்றன என்ற விவரத்தை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. சி. பா ஆதித்தனார் : இதற்கான புள்ளிவிவரங்கள் இப்போது என் கைவசம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விடை அளிக்கப் படும்.

திரு. என். கிட்டப்பா : இம்மாதிரி 32 கூட்டுறவு நிறுவனங்கள் இயங்குவ தாகக் கூறப்பட்டது. அந்த 32-ல் தஞ்சை மாவட்டத்தில் எவ்வளவு இயங்கு கின்றன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மொத்த விவரம் என்னிடம் இருக் கிறது. 32 அல்ல 38. The total is 38 and the amount distributed to these societies for these implements is Rs. 17.16 lakhs. மொத்த விவரம்தான் இருக்கிறது இப்போது. தனியாக விவரம் வேண்டு மென்றால் தனிக் கேள்வி போட்டால் விடை அளிக்கப்படும்.

தமிழ்நாடு நிலவள வங்கி ஊழியர்கள்.

* 159 வினா— திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு நிலவள வங்கியிலும் மாநிலமெங்கும் அதன் கிளைகளிலும் வேலை செய்யும் ஊழியர்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்களில் எத்தனை பேர் நிரந்தரமாக்கப்பட்டிருக்கின்றனர்?

1973 பிப்ரவரி 13]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி, சென்னையில் 90 பேரும், அதன் 11 கிளைகளில் 206 பேரும் வேலை செய்கின்றனர்.

(இ) சென்னை வங்கியில் வேலை செய்யும் 90 பேர்களில் 68 பேர்களும், அதன் 11 கிளைகளில் வேலை செய்யும் 206 பேர்களில் 140 பேர்களும் நிரந்தர மாக்கப்பட்டிருக்கின்றனர்.

திரு. கே. எ. வகாப் : இவர்களை நிரந்தரம் செய்ய அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா? எங்களை நிரந்தரம் செய்யவேண்டுமென்று நிரந்தரம் செய்யப்படாதவர்கள் கோரிக்கை ஏதாவது விடுத்திருக்கிறார்களா? அதை அரசாங்கம் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்த வங்கிக்கு தனி பை-லாஸ் இருக்கின்றன. ஸ்பெஷல் பை-லாஸ், தனி விதிகள் இருக்கின்றன. அதன்படி ஒரு ஆண்டு காலம் பயிற்சியான ஊழியர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டு மென்று இருக்கிறது. அதை மீறி ஏதாவது நடைபெறுமானால் அது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால் அதைக் கவனித்து ஆவன செய்யப் படும்.

திரு. என். கிட்டப்பா : இந்த நில வள வங்கியில் பணியாற்றுகிற பணி யாளர்களை அரசு ஊழியர்களாக ஏற்றுக்கொள்கிற செயற்குறிப்பு ஏதாவது இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்த வினா தமிழ்நாடு நிலவள வங்கி ஊழியர்கள் பற்றியது. அரசாங்க ஊழியர்களும் அதில் ஃபாரின் சர்வீஸ் என்ற அளவில் பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த ஊழியர்களுக்கு யூனியன் அமைக்கிற உரிமை இருக்கிறதா ? அவர்கள் யூனியன் அமைத்துக்கொண்டு தங்களுடைய குறைகளை தீர்த்துக்கொள்வது பொருத்தமாகயிருக்காதா என்ற விவரங்களைத் தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : யூனியன் ஒன்று இருக்கிறது. அது எப்படிச் செயல்படுகிறது என்பதற்குத் தனிக் கேள்விபோட்டால் முழு விவரமும் சொல்கிறேன். ஆனால் யூனியன் இருக்கிறது.